விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 20 ஞாயிற்றுக்கிழமை (03.06.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கொழும்பில் 60 தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது 60 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12 பொலிஸ் பிரிவுகளில் நேற்று முன்தினம் முதல் நேற்று அதிகாலை வரை இச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கொழும்பு மத்திய பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜத் (06 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து பாரவூர்திகள் தென்பகுதிக்குச் செல்லத் தடை

(வவுனியா)

இலங்கையின் வடக்கே வவுனியாவிலிருந்து தெற்கு நோக்கிப் பொருள்களை ஏற்றிச்செல்லும் பாரவூர்திகளின் போக்குவரத்துக்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலிருந்து கொழும்புக்கும் நாட்டின் தென்பகுதியிலுள்ள ஏனைய பிரதேசங்களுக்கும் விவசாயம் மற்றும் மீன் உற்பத்திப் பொருள்களை ஏற்றிச்செல்லும் பாரவூர்திகள் அனைத்தும் வவுனியா தேக்கவத்தையில் அமைந்துள்ள வாகனச் சோதனை நிலையத்தில் முழுமையாகச் சோதனையிடப்பட்டுப் பிரயாண அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சோதனைச்சாவடியில் தென்பகுதி நோக்கிச்செல்லும் பாரவூர்திகளுக்குப் பிரயாண அனுமதி வழங்க வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சிடமிருந்து கிடைத்த உத்தரவையடுத்தே (06 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்கள் கொள்வனவு செய்ய சீனாவுடன் இலங்கை ஒப்பந்தம்

## கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றதாக இலண்டனில் வெளிவரும் சஞ்சிகை தகவல்

(இலண்டன்)

இலங்கை அரசு, விடுதலைப்புலிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளை 'முறியடிக்கும்' வகையில் இந்தியாவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான பல முக்கிய ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் கூட்டு ரோந்துப் பணியில் ஈடுபட இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது

### இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை–இந்தியக் கடற்படைகள் இந்தியப் பெருங்கடல் பகுதியில் கூட்டுரோந்து பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட இந்தியா தனது சம்மதத்தைத் தெரிவித்திருப்பதாக இலங்கை வெளிநாட்டு அமைச்சுக் கூறியுள்ளது.

சிங்கப்பூரில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிய பாதுகாப்பு மாநாட்டின் பின்னணியில் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் றோகித போகொல்லாகம தலைமையிலான இலங்கையின் உயர் பாதுகாப்புக் குழுவொன்று நேற்று இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் (06 ஆம் பக்கம் பார்க்க)

# தனது குப்பைகளை வாங்க இந்தியா நிர்ப்பந்திக்கின்றது

## தென்னிலங்கை ஊடகங்கள் கொதிப்பு

(கொழும்பு)

தனது குப்பைகளை வாங்க இந்திய அரசு,

மோ, பாகிஸ்தானிடமோ ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கூடாது என இந்தியத்

எம்.கே.நாராயணனின் கருத்தைக் கண்டித்துள்ள தென்னிலங்கைப் பத்திரி

## கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

### சர்வதேச மாணவர் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 04.05.2007 அன்று இரவு வேளை அவர்களது வீடுகளில் வைத்து ஆயுததாரிகளினால் கடத்தப்பட்ட பாடசாலை மாணவர்கள் மூவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் அனைத்துத் தரப்புக்களையும் வலியுறுத்துகின்றோம்.

கடத்தப்பட்ட சக மாணவர்களின் விடுத

(கொழும்பு)

தனது குப்பைகளை வாங்க இந்திய அரசு, இலங்கையை நிர்ப்பந்திக்கின்றது என கொழும்பு ஊடகம் ஒன்று தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

இந்தியாவைத் தவிர இலங்கை, சீனாவிடமோ, பாகிஸ்தானிடமோ ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கூடாது என இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்த கருத்தையடுத்து தென்னிலங்கை ஊடகங்கள் கொதித்தெழுந்துள்ளன.

எம்.கே.நாராயணனின் கருத்தைக் கண்டித்துள்ள தென்னிலங்கைப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் ஒன்றில், தனது குப்பைகளை வாங்குமாறு இந்தியா, இலங்கையை நிர்ப்பந்திப்பதாக எழுதியுள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

டிக்கை எடுக்குமாறு மீண்டும் அனைத்துத் தரப்புக்களையும் வலியுறுத்துகின்றோம்.

கடத்தப்பட்ட சக மாணவர்களின் விடுதலைக்காகவும் கடத்தல் சம்பவத்தை வெளிக்கொண்டு வரும் நோக்கிலும் பல்கலைக்கழக மாணவர்களும் பாடசாலை மாணவர்களும் தமது (06 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் முன்னேற்ற முயற்சி மட்டக்களப்பில் முறியடிப்பு

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு குடும்பிமலைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மாவடிஓடையை நோக்கி நேற்றுப் படையினர் பகல் 11.30 மணியளவில் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியினை முறியடித்துள்ளதாக விடுதலைப்புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## ★ ஜே.வி.பி. அச்சுறுத்தல் ★

# நந்தன குணதிலக கனடாவில் தஞ்சம்

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிநாடு ஒன்றில் தஞ்சமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியின் பாதாள உலகக் கோஷ்டியினாலேயே அவருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டதாகவும் அதனல் அவர் கனடாவிற்குச் சென்றுள்ளதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக 2000 (06 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய வகைப் பறவை நேற்றுப் பறக்க விடப்பட்டது

(காரைநகர்)

மூளாய் தொல்புரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வகைப் பறவை நேற்று பொன்னாலைக் கடற்கரையில் வைத்து பறக்க விடப்பட்டது.

சங்கானைப் பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய, தொல்புரம் மேற்கு கிராம உத்தியோகஸ்தர் எஸ்.கே.சிவலிங்கம் குறித்த பறவையை நேற்று பறக்கவிட்டார்.

பிரஸ்தாப பறவை தொல்புரத்தைச் சேர்ந்த தங்கராஜா றேக்குமாரினால் பாராமரிக்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-246)

# வெள்ளவத்தை தொடர்மாடி தமிழர்களை வெளியேறுமாறு பொலிஸார் கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

## வீதிகளை மூடுவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

கொழும்பு மத்திய பகுதியில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கியுள்ள தமிழ் மக்கள் வெளியேற வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாரின்நடவடிக்கையை பார்க்கும்போது விரைவில் வெள்ளவத்தைப் பகுதியில் தொடர்மாடி வீடுகளில் உள்ள தமிழ் மக்களையும் வெளியேறுமாறு கோரினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வீதிகளை மூடுவதன் மூலமோ தமிழ் மக்களை வெளியேற்றுவதன் மூலமோ பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். கொழும்பு செட்டித்தெருவில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட நகை வியாபாரிகள் தற்போது சென்னைக்குச் சென்றுவிட்டனர். அச்சம் காரணமாக முஸ்லிம் வர்த்தகர்கள் மலேசியா சென்ற வண்ணம் [illegible]

இந் நிலையில் தங்கள் வீட்டுக் [illegible] தட்டும் வரை (02 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை வளர்த்து விட்ட இந்தியா எமக்கு பரிந்துரை செய்ய முடியாது

## முன்னாள் இராணுவத் தளபதி சீற்றம்

அரசு யாரிடம் ஆயுதங்களை வாங்க வேண்டும் என்பதனைக் கூறும் உரிமை இந்தியாவுக்கு கிடையாது என முன்னாள் விமானப்படைத் தளபதியான ஹரிக்குணத் திலக ,முன்னாள் இராணுவத் தளபதியான ஹமில்ட்டன் வணசிங்க ஆகியோர் தெரி வித்துள்ளனர்.

இது தொடர்பில் ஹமில்ட்டன் வணசிங்க தெரிவித்துள்ளதாவது, இலங்கை எங்கே ஆயுதங்களை வாங்கவேண்டும் என்பதனை இந்தியா கூறக்கூடாது. அது எமது அரசின் தெரிவு. எனவே இந்தியாவின் அறிக்கை நியாயமற்றது.

கடந்த காலங்களில் நாம் நெருக்கடிக ளைச் சந்தித்தபோது சீனா,பாகிஸ்தான் போன்ற நாடுகள் எமக்கு உதவி இருந்தன. எனவே நாம் அவற்றை கைவிடமுடியாது. இலங்கையில் பிரச்சினைகளை தோற்று வித்ததில் இந்தியாவிற்கும் பங்கு உண்டு.

விடுதலைப்புலிகளை இந்தியாவே உரு வாக்கியது. அதுதான் உண்மை என்றார் ஹமில்ட்டன் வணசிங்க. இவர் 1988-1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத் தளபதியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எந்த நாட்டிலும் ஆயுதங்களைக் கொள் வனவு செய்யும் உரிமை இலங்கைக்கு உண்டு. எமக்கு பாதுகாப்பு ஆயுதங்களை இந்தியா தரமறுத்தால் அதனை வேறு நாடு களில் கொள்வனவு செய்வது தவறல்ல. இவ்வாறு முன்னாள் விமானப்படைத் தள பதியான எயார் வைஸ் மார்சல் ஹரிகுணத் திலக குறிப்பிட்டார். (ந-5)

# மண்டைதீவுக்குச் செல்லத் தடை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கு வெளியார் எவரும் செல்ல கடற்படையினர் தடை விதித்துள்ள தாக தெரியவருகின்றது. மண்டைதீவில் குடி யிருப்பவர்களைத் தவிர வேறு எவரும் அங்கு செல்ல முடியாதென கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

அங்கு தற்போது குடியிருப்பவர்களைத் தவிர வெளியார் எவரையும் அனுமதிப்பதில் லை என்பதுடன் மண்டை தீவை சொந்த இட மாகக் கொண்டிருந்தவர்களும் அடையாள அட்டையில் மண்டைதீவு முகவரியைக் கொண்டிருந்தவர்களையும் கூட படையினர் அனுமதிக்கவில்லையென தெரிவிக்கப்படு கின்றது. (ந-5)

# ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 15 இல்

## யாழில் தெரிவானோருக்கு பயண வசதி

ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் கொழும்பில் நடை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான நேர் முகப்பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர் களது பெயர் விபரங்கள் யாழ்.மாவட்ட செய லகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப் பெற்ற பெயர் விபரங்களை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலர் அலுவலகத்தில் பார் வையிடலாம் என அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

மேலும் இந் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கப்பல் பயண ஒழுங்குகள் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதா கவும் எனவே அன்றைய தினம் பயண ஏற் பாடுக ளுடன் மாவட்ட செயல கத்திற்கு சமுக மளிக்கு மாறும் அரச அதிபர் கேட் டுள்ளார். (ந-5)

# இரத்தினபுரியில் இரு சடலம் மீட்பு

இரத்தினபுரி கிரியல்ல .எல்லப்பாலமப் பிர தேசத்தில் தலையில் துப்பாக்கி சூட்டுக்காயங்க ளுடன் இரண்டு சடலங்களை நேற்று பொலிஸார் மீட்டுள்ளனர்.பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்புக்கு அமைய இவ் இரு சடலங்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.இதேவேளை கண்டி மாத்தளை பிர தான வீதியில் பலக்கடுவ பாலத்திற்கு அருகில் தலையில் ஆணி அடிக்கப்பட்ட நிலையில் சடல மொன்றினை மாத்தளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச் சடலத்தின் ஏனைய பகுதிகளும் ஆணி அடிக்கப்பட்ட அடையாளங்கள் காணப்படுவதா கப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டவர் மொறட்டுவ பகுதியைச் சேர்ந்த பாதாள உலக குழுவின் உறுப்பினராக இருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் இந் நபர் வேறு இடத்தில் கொலை செய்யப்பட்டு இப் பாலத்திற்கு அருகில் போடப் பட்டிருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.(ந-3)

# பல்கலைக்கழக ஊழியர்கள் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் களும் மீண்டும் தமது போராட்டத்தை நாளை முதல் ஆரம்பிக்கவுள்ளதாக அறி வித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 24ந் திகதி முதல் மே மாதம் 7 ஆம் திகதிவரை மூன்று அம் சக் கோரிக்கையை முன்வைத்து பல்கலைக் கழக ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட் டத்தில் ஈடுபட்டனர். தொழில்துறைத் திணைக் களத்தின் ஆணையாளர், தொழிற் சங்கத் துடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து கடந்த மாதம் 07 ஆம் திகதி முதல் இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஏற் கனவே இடம் பெற்ற வேலை நிறுத்தப் போராட்டக் காலத்தை விடுமுறையாகக் கணிக்கும்படி சுற்று நிருபம் ஒன்றை பல் கலைக்கழகங்களுக்கு அனுப்பியுள்ளதைத் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தப் போராட் டம் மீண்டும் மூன்று அம்சக்கோரிக்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைநிறுத்தப் போராட்டத்தில் விடு முறைக்கான சுற்று நிருபத்தை இரத்துச் செய்தல்,இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர் களுக்கு மீண்டும் பழைய இடங்களில் வேலைக்கு அமர்த்தல் உள்ளிட்ட கோரிக் கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கற்றல் செயல்பாடுகள் பாதிப் படையாமல் இந்த முறையும் தொண்டு அடிப்படையில் ஊழியர்கள் கடமையாற்றி பரீட்சைகள் மற்றும் செயற்பாடுகள் பாதிக்கா வண்ணம் தமது வேலை நிறுத்தப் பேராட்டத் தை முன்னெடுக்கவுள்ளமை இங்கு குறிப் பிடத்தக்கது. (ந-5)

# வெள்ளவத்தை தொடர்மாடி ...

காத்திருக்கவேண்டாம் என சிங்கள வியாபாரிகளைக் கோரு கின்றோம். தற்போதைய நிலைமையில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ எஞ்சியுள்ள நான்கு வருடங்களை எவ்வாறு கழிக்கப் போகின்றாரோ தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத் துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,கொழும்பு மத்திய பகுதியில் அமைந்துள்ள விடுதிகளில் தங்கியுள்ள தமிழ் மக்கள் வெளியேற வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளதாக தெரிகின்றது.இது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத விடயமாகும்.

இவ்வாறு தமிழ் மக்களை வெளியேறுமாறு கோரமுடியாது. பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒழுங்குமுறையில் மேற்கொள்ள வேண்டும். அதனை விடுத்து வீதிகளை மூடுவதோ தமிழ்மக்க ளை விடுதிகளில் இருந்து வெளியேறக்கோருவதோ முறையற்ற செயலாகும்.

பொலிஸாரின் நடவடிக்கையை பார்க்கும்போது விரைவில் வெள்ளவத்தைப் பகுதியில் தொடர்மாடி வீடுகளில் உள்ள தமிழ் மக்களையும் வெளியேறுமாறு கோருவார்கள் போல் தெரிகின் றது.வீதிகளை மூடுவதன் மூலமோ தமிழ் மக்களை வெளி யேற்றுவதன் மூலமோ பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதை அரசாங்கம் உணரவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி பாதிக்கப்பட்டவர்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கும்.

*இந்தியாவின் எச்சரிக்கை*

சீனா,பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் இலங்கை ஆயுதங்க ளைக் கோரக்கூடாது என்று இந்தியா தெரிவித்துள்ளது. இது மிகவும் சிந்திக்கவேண்டிய விடயமாகும். இந்தியாவைப் புறக்க ணித்து இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காணமுடியாது.எனவே நாம் இந்தியாவுடன் சுமுகமாகவே ராஜதந்திர ரீதியில் செயற்படவேண்டும். இந்தியா கடந்த காலங்களில் இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு தனது கையை சுட்டுக்கொண்டது. தற்போது இந்தியா, இலங்கை விவகாரம் தொடர்பாக மிகவும் அவதானமாக இருக்கின்றது.

அரசாங்கம் ஏனைய நாடுகளுடன் செய்து கொள்கின்ற உடன்படிக்கைகள் இந்தியாவுடனான எமது உறவை பாதிக் கக்கூடாது. ஆபத்தான நேரங்களில் இந்தியா எமக்கு பல்வேறு உதவிகளை செய்துள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்தியா விரும்பாத வகையில் இலங்கை செயற்பட்டால் இந்தியா கோபமடைவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

*சிங்கள மக்களை வெளியேறுமாறு வேடுவர்கள் கோரும் நிலைமை ஏற்படும்*

ஜாதிக ஹெல உறுமய யதார்த்தமற்ற மற்றும் இனப்பிரச் சினையை மேலும் உக்கிரப்படுத்தக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன் றை வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்களை தமிழ் நாட்டுக்குச் சென்று ஈழத்தைக் கோரு மாறு கூறுவதற்கு ஹெல உறுமயவுக்கு எந்த உரிமையும் இல் லை. இந் நாட்டில் பல இனங்கள் வாழ்கின்றன என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.அப்படியானால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்களான பேரியல் அஷ்ரப்,ரவூப் ஹக்கீம், டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் எங்கு செல்வது?

ஹெல உறுமய கூறுவதைப் பார்த்தால் இந்த நாட்டின் வேடுவர் இனத்தவர்கள் சிங்கள மக்களை வேறு நாட்டுக்குச் செல்லுமாறு கோருகின்ற நிலைமை ஏற்படலாம். கொழும்பில் தமிழ் மக்கள் பிரச்சினையின்றி வாழ்வதாக ஹெல உறுமய அடிக்கடி கூறுகின்றது. ஆனால் விடுதிகளில் உள்ள தமிழ் மக்க ளையே வெளியேறுமாறு கோரப்படுகின்றமை ஹெல உறுமயவுக்கு தெரியாதா?

*அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு மத்தியில் சபாநாயகர்*

சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார அரசாங்கத்தின் அழுத்தங்களுக்கு உட்பட் டுள்ளார். அவரால் சுயமாக தீர்மானங்களை மேற்கொள்ள முடியவில்லை.

காரணம் அவரின் பதவி பறிபோகின்ற நிலைமையே காணப்படுகின்றது. இதனால் தான் மகிந்த-புலி உடன்படிக்கை தொடர்பாக ஆராய அவர் இதுவரை பாராளுமன்றத் தெரி வுக்குழுவை நியமிக்காமல் இருக்கின்றார். இதனால் பாராளுமன்றம் ஏளனத்திற்கு உட்பட்டுவிட்டது.

அரச வங்கிக்கட்டமைப்பு வீழ்ச்சியடைந் துள்ளது. அரச வங்கிகளில் இருந்து அரசாங் கம் கடன்களை வாங்குவதால் பண வீக்கம் அதிகரிக்கின்றது.

மகிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ளபடி அரச ஊழியர்களுக்கு ஒழுங்கான முறை யில் கடன்களும் பெற்றுக்கொடுக்கப் பட வில்லை.

*பால்மா விலையேற்றம்*

பால்மா வகைகளின் விலைகள் பாரியள வில் உயர்வடைந்து விட்டன. ,ஹைலன்ட் பால்மா 40 ரூபாவாலும் ,நெஸ்பிறே 17 ரூபா 50 சதத்தாலும், டயமன்ட் 27 ரூபாவா லும், லக்ஸ்பிறே 6 ரூபாவாலும் உயர்வ டைந்துள்ளன.

இதனால் மக்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்கப்போகின்றனர். ஆனால் அமைச்சர்களோ புதிய கார்களில் வலம் வருகின்றனர்.அரசாங்கத்தின் வீண் செலவு கள் அதிகரித்துவிட்டன. எரிபொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வருடங்களில் ராஜபக்ஷ சகோதரர்கள் இந்த நாட்டை 1977 ஆம் ஆண்டு யுகத்திற்குக் கொண்டு சென்று விட்டனர்.

ஜனாதிபதியைச் சுற்றி 25 இற்கும் மேற் பட்ட ஆலோசகர்கள் இருக்கின்றனர். ஆனால் ஜனாதிபதியும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் பங்கருக்குள் இருக்கின்றனர்.

மாறுவேடத்தில் இரவு நேரங்களில் வீடு களுக்குச் சென்று மக்கள் படுகின்ற கஷ்டங் களை கண்டறியுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுகின்றோம். இது அரச காலத்து முறையாக இருப்பினும் எமது நாட் டின் நிலை அந்தளவுக்கு பரிதாபகரமாக உள்ளது என்றார். (ந-5)


## பின்னுறுதித் தீர்வை

*யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்*

சுரேஸ்குமார் பெண் மேரி ஆன் யூலியானா
ராஜீவி,
957/6 சென் ஜோசப் வீதி,
வலன்புரம், கொழும்புத்துறை.

வழக்காளி

வழ.இல.மண நீக்கம்/714

எதிராக

மரியாம்பிள்ளை ஜெஸ்லி
சுரேஸ்குமார்
82 கடற்கரைவீதி,நீர்கொழும்பு.

எதிராளி.

இவ் வழக்கு 2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு.மு. திருநாவுக்கரசு அவர்களும் பிரசன்ன மாயிருக்க மன்றின் கட்டளைப்படி எதிரா ளிக்கு அழைப்புக்கட்டளை 15.03.2007 ஆம் திகதிய வலம்புரி தினசரிப்பத் திரிகையில் பிரசுரித்து பதில் சேவகம் செய்யப்பட்டு திரும்பல் திகதியான 03.04.2007 ஆம் திகதி எதிராளி மன்றில் சமுகமின்மையால் இவ் வழக்கு இன்று ஒருமுக விளக்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு அமைய வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த வழக்காளியின் சட்டத்தரணி மன்றின் அனுமதியை கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராது,வ 1 ஆவணம் வழக்காளி மன்றில் இன்று அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து மன்று பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணத்தை பெற தகுதியுடையவர் எனக்கண்டு பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி நிறைவேறிய பதிவுத்திருமணத்தை, எதிராளி வழக்காளி யை விட்டு பிரிந்து சென்று வேண்டும் என்றே வன்ம உறவறுப்பு செய்த குற்றத் திற்காக வெற்றும் வெறுதுமானதெனக் கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் பிறந்த டனிஸ்டன்,டொறதி என்ற இரு பிள்ளைகளின் பாதுகாப்பும் பராமரிப்பும் தொடர்ந்து பிள்ளைகளின் தாயான வழக்காளியிடமே இருக்கவேண்டும் என்று இத் தால் கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளி தன் சாட்சியத்தில் குறிப்பிட்டதன் பிரகாரம் வழக்காளிக்கும் எதிராளிக்குமிடையில் பிறந்த பிள்ளைகளான டனிஸ்டன்,டொறதி ஆகியோ ரின் பெயரில் யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான சேமிப்பு கணக்கில் இருக்கும் பணத்தை மன்றின் அனுமதியுடன் குறித்த இரு பிள்ளை களின் தந்தையாரான இவ் வழக்கின் எதிராளியான மரியாம்பிள்ளை ஜெஸ்லி சுரேஸ்குமார் கையாளக்கூடாது என கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி வலம்புரி தினசரிப்பத்திரிகையில் விளம்பரப்படுத்துவதன் மூலம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதி யில் இருந்து மூன்று மாத காலத்திற்குள், எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னு றுதித்தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படும் என கட்டளையிடப்படுகின்றது.

*2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 10 ஆம் திகதி*

*வரைந்தது*
மு.திருநாவுக்கரசு
வழக்காளியின் சட்டத்தரணி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்.

*நீதிமன்றின் கட்டளைப்படி*
து.சிறீமோகன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,யாழ்ப்பாணம். (100)

# எண்சோதிடம் 1

எண் சோதிட மேதை பண்டிட் ஸேதுராமன் எழுதிய 'எண் சோதிட நூல்' அநேக வாசகர்களின் வேண்டுதலுக்கு இணங்க ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிவரும்.
நூலில் இடம்பெற்றுள்ள முகவுரையில் எண் சோதிடத்திற்குரிய ஆய்வியல் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளதால் நூலின் முகவுரையும் இப் பகுதியில் பிரசுரிக்கப்படுகிறது. (ஆ-ர்)

இந் நூலில் 1969 ஆம் ஆண்டுக்குப் பின் எந்த விஷயமும் சேர்க்கப்படவில்லை. அவசியம் கருதி சில கருத்துக்களை வாசகர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

இந்நூற் கருத்துக்களைப் பின்பற்றிய பின் வாழ்க்கையில் மகோன்னத நிலையடைந்த ஏராளமான வெளிநாட்டில் வாழும் அன்பர்களும் தொழில் நிறுவனங்களும் அழைத்ததின் பேரில் மும்முறை வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கீழ்த்திசையில் இந்தோனேஷியாவிலிருந்து ஜப்பான் வரை ஐரோப்பா, அமெரிக்கா முதலிய எல்லா தேசங்களிலும் அன்பர்கள் மூலம் இந் நூற்கருத்துக்கள் நன்கு பரவியிருந்ததால் எல்லா இடங்களிலும் ஏராளமான வரவேற்பு தானாகவே இருந்தது. இந்த சாஸ்திரத்தின் மகிமையை அறிந்த அந்நாட்டு ரேடியோ டெலிவிஷன் நிலையங்களும் பிரபலமான எல்லா பத்திரிகைகளும் உற் சாகமாக மிகச் சிறந்த முறையில் முக்கியமான முழுப்பக்கங்களை என் விஜயத்திற்கும் பேட்டிகளுக்கும் அளித்து மிகுந்த அக்கறை காட்டி கௌரவித்ததற்கு என் ஆழ்ந்த நன்றியை தெரிவிக்கவேண்டியது மிக அவசியம். தமிழ் மொழியே அறியாதவர்களும் இவ்வளவு ஆர்வம் காட்டியது அவர்களது அறிவுப் பசியையே குறிக்கிறது.

ஹாங்காங் நகர பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ள விலைக்கு அதிகமாகவே விலை கொடுத்து உலக முழுவதும் பல பதிப்புக்கள் விற்பனையான ஒரே புத்தகத்தின் ஆசிரியரின் விஜயம் இந்நூல் காம சம்பந்தப்பட்டதல்ல. எண்களைப்பற்றியது என அறியவும் என்று தலையங்கம் எழுதி வரவேற்றன.

எண்களைப் பற்றிய விழிப்புணர்ச்சி எல்லா ஊர்களிலும் அதிகரித்துள்ள சூழ்நிலைகள் மூலம் ஆதாயம் தேட பலரும் நோக்கம் போல் யாதொரு ஆராய்ச்சியும் இன்றி புத்தகங்களை வெளியிட்டு அதிக குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

கற்றறிந்தோர் செய்யும் தொழில்களுக்கு டாக்டர் - வக்கீல் போன்ற தொழில்களில் முறையே பயின்றவர்கள் எவ்வித விளம்பரமும் சுயமாக செய்து கொள்ளக் கூடாதென்பது உலகெங்கிலுமுள்ள கற்றோர் மரபு. இதனையொட்டியே இதுவரை நான் எனக்கோ அதிஷ்ட விஞ்ஞான நூலுக்கோ எந்த விதமான விளம்பரமும் செய்ததில்லை என்பது யாவரும் அறிந்ததே.

போலி மருத்துவர்கள் விளம்பரம் செய்து ஜனங்களை வஞ்சிப்பது போல் பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்து பலர் குழப்பம் விளைவிக்கின்றனர். என் மூலம் முன்னேற்றமும் செல்வமும் அடைந்த சிலர் சாமியார்கள் உட்பட தனக்கும் இந்த சாஸ்திரம் நன்கு தெரியுமென அநேக பிரமுகர்களுக்கு பெயர் மாற்றம் செய்து விபரீதமான தீய விளைவுகளை உண்டாக்கிவிட்டனர்.

வெளிநாடுகளிலும் பலர் நான் அந்நாடுகளுக்கு விஜயம் செய்யாமலிருந்ததுதான் இதற்கான காரணம் என விளக்கியதில்தான் நான் கொழும்பு, லண்டன்,நியூயோர்க் நகரங்களில் அதிக நாட்கள் தங்கும் படியாயிற்று. பல நகரங்களில் என்னிடம் பல வருஷங்கள் சிஷ்யனாக இருந்ததாகச் சொல்லிக் கொண்டு பலர் மனம் போன போக்கில் பெயர் மாற்றங்கள் செய்து சுகமாக வாழ்கின்றனர். என்னுடன் நேரில் தொடர்புள்ள எல்லா அன்பர்களுக்கும் அப்படியான சிஷ்யர்கள் ஒருவரும் இல்லை என்பது நிச்சயமாகத் தெரியும். இம்மாதிரி நபர்களிடம் ஏமாறாமல் உங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

இந்த விளைவுகளுக்கெல்லாம் முக்கிய காரணம் பின்வருமாறு,

அதிஷ்ட விஞ்ஞானம் நூலில் நான் எழுதியுள்ளது தான் இந்த சாஸ்திரம். இதைப் படித்தவுடன் நமக்கு முழுவதும் தெரிந்துவிட்டது என பலரும் நினைப்பதுதான் இதை முழு நூலாக எழுதி வெளியிட்டால் சுமார் இரண்டாயிரம் பக்கங்களாவது பிடிக்கும். அவ்வளவு விரிவாக வெளியிட்டால் சாதாரண மக்கள் முழுதும் படித்து பயனடையாமல் விட்டுவிடுவார்கள் எனக் கருதியே சாதாரணமான தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கூட பயனடைய வேண்டுமென நினைத்து அம்மாதிரி அன்பர்களது வேண்டுகோளின்படி புரியாத வார்த்தைகளே இல்லாத எளிய நூலாக வெளியிடப்பட்டது. பெரும்பாலான வியாபாரத்தில்



ஈடுபட்டுள்ள மிக்க செல்வந்தர்களும் தாங்களும் அன்றாட வாழ்க்கையில் பயனடையக் கூடிய வகையில் எழுதவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். (இதை எதற்காக சொல்கிறேனென்றால் நான் இந்த தொழிலில் ஈடுபட்டுள்ள 41வருஷ காலத்தில் சுமார் 1500க்கு மேற்பட்ட கோடீஸ்வரர்களை சந்தித்திருக்கிறேன். அதில் 5 பேர்கள்தான் ஒரு ஹைஸ்கூல் படிப்பாவது படித்தவர்கள். நான்குறிப்பிடுபவர்கள் ஸ்திரமான செல்வந்தர்கள் லாப நஷ்டங்களால் பாதிக்கப்பட முடியாத நிலையிலுள்ளவர்கள்).

எல்லா பதிப்புக்களிலும் நூல் வரலாறு என்கிற தலைப்பில் இந்நூல் வெளிவர முக்கிய காரணமாக இருந்த பிரபு (தன் பெயர் வெளிடுவதை விரும்பவில்லை) என எழுதியுள்ளேன். என் நண்பர்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்த போதிலும் 8 பதிப்புக்கள் மகத்தான வரவேற்புடன் விற்பனையாகி தமிழ் நாட்டில் மட்டுமே இதன்மூலம் சுமார் ஐம்பதாயிரம் பேர்களுக்கு மேல் மிக்க செல்வந்தர்களான பிறகும் அவருக்கு சேர வேண்டிய புகழையும் இதனால் பயனடைந்தோரின் நன்றி உணர்வையும் அவருக்கு உரித்தாக்குவது என் முக்கிய கடமையாகும். என்னைப் போல் அவருக்கும் வயதாகிவிட்டது. அப்பொழுதோ எனக்கு வயது இருபத்தி ஒன்பது. அவருக்கு இருப்பத்தி மூன்று வயது சங்கோஜப்படுவதில் நியாயமுண்டு. அவருக்கு பெயர் மாற்றம் செய்து தினமும் நான் சொன்னபடியே கையெழுத்திட்டு வந்தால் பத்து நாட்களில் தீரும் என்று சொன்னபடி (இந்நாட்டின் சிறந்த மருத்துவர்களால் தீராதென கைவிடப்பட்ட நோய்)பூரணமாக குணம் அடைந்ததால் இந்த சாஸ்திரத்தில் நூற்றுக்கு நூறு பூரணமாக கடைப்பிடிக்கும் அபிமானியானார்.

அன்றிலிருந்து என் சந்தோஷம் சௌக்கியத்தையே தன்னுடையதாக நினைத்து செயல்பட்டவர் எல்லோரும் இந்த சாஸ்திரத்தால் பயனடைய வேண்டுமென தீவிரமான நாட்டத்துடன் என்னை இந்நூலை வெளியிடச் செய்தார். என்னை அந்த அளவு தொந்தரவு செய்யாமல் இருந்தால் நான் இன்று வரையும் வெளியிட்டிருக்கமாட்டேன் என நினைக்கிறேன் (ஏனெனில் என்னை இந்த நூலை ஆங்கிலத்தில் வெளியிட வேண்டுமென்று பல பிரபல ஆங்கில புத்தகம் வெளியிடுவோர்கள் 1951இல் இருந்து வேண்டிக் கொண்டும் மயங்கிப்போகும் அளவு பணம் கொடுப்பதாக சொல்லிக் கொண்டிருந்தும் இன்னும் ஆங்கிலத்தில் வெளியிடவில்லை) இதற்கு ஒரே முக்கியமான நியாயமான காரணம் என்னவெனில் இந்த அறிவை தீயவர்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடாதென்கிற எண்ணம் தான். இப்பொழுதே எல்லா நாடுகளிலும் தீய சக்திகள் துஷ்டர்களிடம் சிக்கி நல்லோரும் கற்றோரும் செயலிழந்து நிற்கின்றனர்.

தொழில் செய்வோர் எல்லா விதமான அதிகாரிகளிடமும் சிக்கித் தவிக்கின்றனர். நியாய தர்ம உணர்வில்லாதவர்கள் பலமடைந்து புராணகால அரக்கர்கள் போல நன்கு வாழ்கின்றனர். இந்நிலைமாற நல்லவர்களும் இந்நூலைப் பின்பற்றி சிறப்புடன் பயமின்றி தெளிவுடன் வெற்றியோடு வாழ வேண்டுமென்பதே என் அவா.

இம் மாதிரி காரணங்களுக்காக நூலை வெளியிடாவிடின் நல்லவர்களுக்கும் உதவ முடியாமற் போகுமே என வாதிட்டு இந்நூலை வெளியிடச் செய்தவர் மதுரை டி.வி.எஸ். நிறுவனத்தின் சேர்மனாக இப்பொழுதுள்ள ஸ்ரீமான் ஆர். இராமச்சந்திரன் தான். அவருக்கே தமிழ் நாட்டு வாசகர்களின் நன்றி உரித்தாகுக! இதனைப் பின்பற்றுவதன் மூலம் எந்த அளவு அவர்கள் நன்றாக விளங்குகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே.

அதிர்ஷ்ட விஞ்ஞானத்தில் மேற்கொண்டு விஷயங்கள் சேர்க்காமலும் திருத்தாமலும் இருப்பதன் காரணம் அம்மாதிரி திருத்தம் எதுவும் தேவைப்படவில்லை. 1954இல் இருந்து இன்று வரை அந்நூலில் குறிப்பிட்டுள்ள படிதான் ஒவ்வொரு எண்ணின் பலனும் உலகெங்கிலும் நடந்துள்ளன. இந் நூல் உரைகல் போல் இருக்கவேண்டுமென நினைத்து எழுதப்பட்டது.

அரசியல் போன்ற விவகாரத்துக்குட்பட்ட விஷயங்களில் நான் என்றும் தலையிடுவதில்லை என்பது யாவருக்கும் நன்கு தெரியும். ஆனால் தனிப்பட்ட முறையில் அர சாங்க மாறுதல்களால் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு என்றும் எதையும் மறைத்ததில்லை. உதாரணமாக.... (தொடரும்)

## அதிக ஒருநாள் போட்டிகளில் விளையாடுவது வீரர்களின் உடற் தகுதியைப் பாதிக்கும்

## ஐ.சி.சி. கவலை

(டுபாய்)

சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கான இந்த வருட அட்டவணையில் அதிகமான போட்டிகள் இடம்பெற்று இருப்பது வீரர்களின் உடற்தகுதியையும் பாதிக்கும் என்று சர்வதேச கிரிக்கெற் குழு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

ஒரு நாள் போட்டிகளில் அதிகமாக பங்கேற்பதால் முன்னணி வீரர்கள் சிலர் காயமடைந்து விடுகின்றனர். சிலர் அதிகமான போட்டி களில் பங்கேற்பதால் மிகவும் களைப்பு அடைந்து விடுகின்றனர். இதனால் அவர்களது இயல்பான ஆட்டம் பாதிப்பிற்கு உள்ளாகிறது.

இது போன்ற பிரச்சினையில் சிக்கிய இந்திய அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரரான வீரேந்தர் சேவாக் போன்ற சில வீரர்கள் தங்களது பிரச்சினைகள் குறித்து இந்திய கிரிக்கெற் சபையிடம் புகார் செய்தனர். இதனைத் தொடர்ந்து வீரர்களுக்கு சுழற்சி முறையில் போட்டிகளில் பங்கேற்கும் முறையை கிரிக்கெற் சபை கொண்டு வந்தது.

தற்போது சர்வதேச கிரிக்கெற் சபை வீரர்களின் உடற்தகுதி பாதிக்கப்படும் என்று எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஐ.சி.சி. விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு கிரிக்கெற் போட்டிகளுக்கான இந்த வருட அட்டவணையில் முக்கியமாக ஒருநாள் போட்டிகளில் அதிகமான போட்டிகள் இடம்பெற்று இருப்பதற்கு கிரிக்கெற் குழு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. அதிகமான போட்டிகளில் வீரர்கள் விளையாடுவதால் சர்வதேச கிரிக்கெற்றின் தரம் பாதிக்கப்படும். இதனால் வீரர்கள் காயமடைவார்கள் .வேகப் பந்து வீச்சாளர்களும் களைப்பு அடைந்துவிடுவார்கள் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஐ.சி.சியின் கிரிக்கெற் குழுக் கூட்டம் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் டுபாயில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் சுனில் கவாஸ்கர் தலைமை தாங்கினார். இதில் முக்கிய உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

ஜிம்பாப்வே அணி மீண்டும் டெஸ்ட் போட்டியில் விளையாட இந்தக் குழுக் கூட்டத்தின் போது அனுமதி அளிக்கப்பட்டது. அப்போது ஜிம்பாப்வே அணி டெஸ்ட் ஆட்டத்தின் தரம் குறைந்து விடாதபடி, சிறப்பாக ஆடி தனது நிலையை நிறுத்தவேண்டும் என்று அக்குழு கேட்டுக் கொண்டது.

தவிர, ஒருநாள் போட்டியில் ஒரு இன்னிங்சில் 35 ஓவர்களுக்குப் பிறகு பந்தை மாற்ற வேண்டும். உட்பட பல முக்கிய மாற்றங்கள் செய்யவேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரை செய்தது. மேலும்,நோ போல் பந்துகளை பிறி ஹிட் அடிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது பவர் பிளேயின் போது, இன்னர் சர்கிளின் வெளிப்புறம் மூன்று களத் தடுப்பாளர்கள் நிற்க அனுமதிக்க வேண்டும் மற்றும் எல்லைக் கோட்டை 90 யாரிற்குள் உள்ளாக அமைக்க வேண்டும். உட்பட மேலும் சில மாற்றங்களையும் அந்தக் குழு பரிந்துரை செய்தது. தென்னாபிரிக்காவில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெற உள்ள 20க்கு 20 உலகக் கிண்ண போட்டியின் போது, வீரர்கள் நேரடியாக மூன்றாவது நடுவரிடம் முறையிடுவதை அனுமதிக்கக் கூடாது என்றும் அந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. (5)

## அணித்தலைவர் பதவி யூனிசுக்கு வழங்கப்படாது

## பாக். கிரிக்கெற் சபை அறிவிப்பு

யூனிஸ்கானுக்கு மீண்டும் அணித் தலைவர் பதவி வழங்கமாட்டோம் என பாகிஸ்தான் கிரிக்கெற் சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணித் தலைவராக இருந்த இன்சமாம் ஓய்வு பெற்றதையடுத்து துணைத் தலைவராக இருந்த யூனிசுக்கு இப் பொறுப்பு வழங்கப்பட்டது. இதை யூனிஸ் மறுக்க , சோயப் மலிக் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார். நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் கிரிக்கெற் சபைத் தலைவர் நசீம் அஷ்ரப் தெரிவிக்கையில், ஒரு வீரராக யூனிசுக்கு அணியில் இடம் உண்டு.

ஆனால் அணித்தலைவர் பொறுப்பு அவருக்கு நிச்சயம் மீண்டும் வழங்கப்படாது. பொறுப்பை ஏற்றுக்கொள்ள மறுத்த யூனிசின் முடிவு மிகவும் வருத்தம் அளித்தது. இதற்காக அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.விருப்பத்தை தெரிவிக்க அவருக்கு உரிமை உள்ளது. அக்தர் போதிய உடற் தகுதி இல்லாததால் தான் ஆப்ரோ- ஆசிய கிரிக்கெற் தொடரிலிருந்து விலகினார். அவர் செப்டம்பருக்குள் முழுமையாக தேறிவிடுவார் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அஷ்ரப் தெரிவித்தார். (5)

## பங்களாதேஷ் தொடரில் சமிந்தவாஸ் விளையாடுவார்

பங்களாதேஷ் தொடருக்கான இலங்கை அணியில் சமிந்தவாஸ் இடம்பெறுவார் என அணி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் அணி இம்மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் ஒருநாள் போட்டி தொடரில் பங்கேற்க உள்ளது. இத் தொடருக்கான இலங்கை அணியில் வாஸ், முரளிதரன் மற்றும் சங்கக்கார இடம்பெறுவர் என அவர் குறிப்பிட்டார்.

உள்ளூர் போட்டிகளில் கலந்து கொண்டதால் இவர்கள் சமீபத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக அபுதாபியில் நடந்த தொடரில் பங்கேற்கவில்லை.

எதிர்வரும் 25ஆம்திகதி கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடக்க இருந்த முதல் டெஸ்ட் சிங்கள ஸ்போர்ட் மைதானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.



2 ஆவது டெஸ்ட் (ஜூலை 3-7) சரவணமுத்து மைதானத்திலும் 3ஆவது டெஸ்ட் (ஜூலை 11-15) சண்டி அஸ்கிஸ மைதானத்திலும் நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

## இன்று ஒரு தகவல்

### பக்தி போகிற பாதை!

ஒரு சந்நியாசி. அவர் ஒருநாள் ஒரு கனவு கண்டாராம். அந்தக் கனவிலே அவர் சொர்க்கத்துக்குப் போகிறார். அங்கே ஒரு பெரிய திருவிழா நடந்து கொண்டிருந்தது.

எங்கே பார்த்தாலும் அலங்கார வளைவுகள்... வண்ணமயமான விளக்குகள்... பாதை முழுவதும் மலர்கள்... எல்லாக் கட்டடங்களும் ஒளிமயம்...

கோலாகலமாக, பிரமாண்டமாக அந்தத் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அது என்ன திருவிழா என்பது இந்தச் சந்நியாசிக்குப் புரியவில்லை. எதிரே வந்து கொண்டிருந்த ஒருவரிடம் "என்ன விசேஷம் இங்கே?" என்று விசாரித்தார்.

"உனக்குத் தெரியாதா?... இன்று இறைவனுக்குப் பிறந்தநாள்... அதைத் தான் எல்லோரும் சேர்ந்து கொண்டாடுகிறோம்... இதற்காக பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று வரப்போகிறது... இறைவனே அந்த ஊர்வலத்திலே கலந்து கொள்கிறார்..." என்றார் அவர்.

உடனே அந்தச் சந்நியாசி ஒரு மர நிழலிலே ஒதுங்கி நின்றார். ஊர்வலம் வந்து கொண்டேயிருந்தது. முதலிலே ஒரு குதிரை வந்தது. அதன் மேல் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்குப் பின்னால் நிறையப் பேர் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள்.

"இவ்வளவு கூட்டம் இவர் பின்னாலே வருகிறதே... யார் இவர்" என்று கேட்டார் சந்நியாசி. ஒரு மதத்தின் பெயரைச் சொல்லி இவர் அந்த மதத்தின் தலைவர்... அவரைப் பின்பற்றுகிற மக்கள் கூட்டம் பின்னால் வந்து கொண்டிருக்கிறது... என்றார்கள்.

அவருக்கு அடுத்தபடியாக இன்னொரு குதிரையில் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவருக்குப் பின்னாலும் ஏகப்பட்ட கூட்டம்.

"இவர் யார்?" என்று கேட்டார் சந்நியாசி. இன்னொரு மதத்தின் பெயரைச் சொல்லி "இவர் அந்த மதத்தின் தலைவர்... அவர் வழியைப் பின்பற்றுகிறவர்கள் அவர் பின்னாலே கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றார்கள்.

இவர்களுக்கு பின்னால் ஒவ்வொரு கூட்டம் வந்து கொண்டேயிருந்தது. கொஞ்சநேரம் கழித்து வயதான ஒருவர் குதிரையில் வந்து கொண்டிருந்தார்.

ஆனால்... அவருக்குப் பின்னால் யாருமே வரவில்லை. அவர் அந்த ஊர்வலத்தைச் சேர்ந்தவரா? இல்லையா? என்பதே தெரியவில்லை.

"இவர் யார்? இவர் ஏன் இப்படித் தனியாக வந்து கொண்டிருக்கிறார்?" என்று கேட்டார் சந்நியாசி.

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? இவர் தான் கடவுள். இவருக்குத் தான் இன்று பிறந்தநாள்... முன்னாலே போகிற கூட்டம் எல்லாம் இவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காகச் செல்லும் கூட்டம்" என்றார்கள்.

இதைக் கேட்டதும் சந்நியாசிக்குத் தூக்கிவாரிப் போட்டது. இதுவரை கனவு கண்டு கொண்டிருந்தவர் விழித்துக் கொண்டார். அதன்பின் யோசித்துப் பார்த்தார். உண்மைதான்.

மக்கள் எல்லோரும் பக்தி மார்க்கத்திலே போவதாக நினைத்துக்கொண்டு பாதை மாறிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். கடவுளைப் பின்பற்றுவதாக நினைக்கிறார்கள் பக்தர்கள். ஆனால் கடவுளுக்குப் பின்னால் யாருமே இல்லை!

இன்னமும் இயல்பாக இதைப்பற்றி யோசித்துப் பார்த்தால் உண்மைக்குப் பின்னால்தான் நான் போய்க்கொண்டிருக்கிறேன் என்று நிறையப் பேர் சொல்கிறார்கள். ஆனால் அந்த உண்மை அநாதையாகப் போய்க்கொண்டு இருக்கிறது... அப்படி ஆகிவிட்டது உலகம்!

இந்தக் காலத்திலேயும் ஓர் ஊர்வலம்! ஒரு பெரிய மனிதருக்குப் பிறந்தநாள் விழா! அவர் குதிரை மீது அமர்ந்து முன்னால் போய்க் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் ஒரு நூறு பேர் போகிறார்கள். எல்லோரும் பணம்கொடுத்து ஏற்பாடு செய்யப்பட்டவர்கள்.

கொஞ்சத் தூரம் நடந்ததும் கால் வலிக்க ஆரம்பித்தது. ஒவ்வொருவராக ஒதுங்க ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்திலே குதிரையில் போனவர் திரும்பிப் பார்த்தார். பின்னால் யாருமே இல்லை. எல்லோரும் ஓடிப் போய் விட்டார்கள். ஒரேயொரு ஆள் மட்டும் மிகவும் விசுவாசமாக பின்னால் நடந்து வந்து கொண்டிருந்தான்.

"நீ வீட்டுக்குப் போகவில்லையா?" என்று கேட்டார் அவர். "நீங்கள் குதிரையையும் அதற்கான வாடகைப் பணத்தையும் கொடுத்துவிட்டால் நானும் போய் விடுவேன்" என்றான் அவன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இன்று இருமுனைப் போரை எதிர்கொள்ளும் தமிழினம்

தமிழினம் இருமுனைப் போரை சந்திக்கின்றது. ஒன்று எதிரியின் இன அழிப்பிற்குள்ளும் கொடுமையான போருக்குள்ளும் நாம் தள்ளப்பட்டு அதற்குள் இருந்து மீள்வதற்குமான விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இன்னொன்று உலகத்தின் அசைவியக்கத் தோடு ஒன்றித்திருக்க வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். அதற்காகவும் நாங்கள் போராடவேண்டிய வர்களாக இருக்கின்றோம். உயிர் வாழ்தலுக்கான போராட்டத்தில் நாங்கள் வென்று எம்மை தற்காத்துக்கொள்ள முடியாவிட்டால் இந்த பூமிப்பந்திலே வாழமுடியாது.

குறிப்பாக எங்கள் தாயகத்தை நாங்கள் இழந்து அழிந்துவிடுவோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் 'கணி நுட்பம்' மாத மலர் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு நூலை வெளியிட்டுவைத்த பின்னர் சிறப்புரையாற்றுகையிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

'கணிநுட்பம்' மாத மலர் நூல் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கணி நுட்பக் கூட்டு நிறுவனமும் ரி.ஆர்.ரெக் நிறுவனமும் இணைந்து இந்த இதழை வெளியிட்டன.

சு.ப. தமிழ்ச்செல்வன் இங்கு உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

அறிவியல் வளர்ச்சியுடன் சேர்ந்து கொண்டு அசைந்து போக வேண்டிய தேவைக்குள் தமிழீழத் தேசியத் தலைவர் அதனைச் சாத்தியமாக்கியிருக்கின்றார். எங்களுடைய தேசத்தில் புதிய தலைமுறை அறிவியல்துறையில், தொழில் நுட்பத்துறையில் மேம்பட்ட சமூகமாக வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்ற தமிழீழத் தேசியத்தலைவரின் எண்ணத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் வழிகாட்டுதலுக்கும் வடிவம் கொடுக் கும் வகையில் கணிநுட்பப் பிரிவு எழுந்துள்ளது. அதன் ஒரு வெளிப்பாடாக எமது தாய்மொழியில் கணிநுட்பம் தொடர்பான ஓர் அறிவியல் சஞ்சிகையை அவர்கள் தொடக்கியுள்ளனர். இதனை மிகவும் மகிழ்ச்சிக்குரிய நம்பிக்கை தரும் முயற்சியாக நாங்கள் பார்க்கின்றோம்.

மனிதனின் அசைவியக்கத்தின் ஓர் உறுப்பாக இன்று கணினி மாறிவிட்டது. கணினி யுகத்திற்குள் நாங்கள் புகுந்து கொள்ளாவிட்டால் இந்த உலகப் பந்தில் எங்களை நிலைப்படுத்திக்கொள்ளமுடியாத ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டுவிடுவோம். அடுத்தது இந்த உலகப்பந்தில் வாழவேண்டுமாக இருந்தால், உலகப் பந்தில் நிலைக்கவேண்டுமாக இருந்தால் உலகத்தின் அசை வியக்கத்தோடு நாங்களும் எங்களை உட்புகுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறுதான் இன்று தொழில்நுட்பத்தை பார்க்க வேண்டும். அதிலும் குறிப்பாக கணினியுகம் என்பது இன்று எல்லாவற்றுக்குள் ளும் உட்புகுந்துள்ளதால் கணினி தொடர் பான அறிவை நாங்கள். எங்களுக்குள் ஆழமாக கற்றுக் கொள்ளவேண் டிய நிர்ப்பந்தத்திற்குள் நாங்கள் தள்ளப் பட்டுள்ளோம்.

போர்ச் சூழலுக்குள் அது சாத்தியமாகுமா என்பது கேள்வி. போர் திணிக்கப்படும் போது எங்களுக்கு எல்லாமே தடுக்கப்படும், தடைசெய்யப்படும். அதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படும். ஆகவே இந்தக் கட்டத்தில் நாம் நின்று கொண்டு உலகப்பந்திலே அறிவியல் வளர்ச்சியுடன் சேர்ந்துகொண்டு அசைந்து போக வேண்டிய தேவைக்குள் நாங்கள் இருக்கின்றோம். அது சாத்தியமாகுமா என்பதுதான் கேள்வி. இதனையும் தமிழீழத் தேசியத் தலைவர் சாத்தியமாக்கியிருக்கின்றார்.

எல்லாருக்கும் அது தான் அதிசயம். தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது உலகில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்களிற்கு ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறது. எல்லாவற்றையும் அதிசயமாகப் பார்க்கிறார்கள். அதற்குக் காரணம் தேசியத் தலைவரின் எண்ணங்களும் சிந்தனைகளும் வழி நடத்தல்களும் தான். இன்று எதிரி எல்லாவிதமான தொழில் நுட்பங்களையும் கொண்டு வந்து எங்களின் தேசத்தை அழிப்பதற்கு தமிழினத்தின் விடுதலைப்போரை இல்லாமல் செய்வதற்கு முயன்று கொண்டிருக்கின்றான். அதற்குள் எதிர்நீச்சல் போட்டு அதை எதிர்கொண்டு அதை முறியடித்து எங்களுடைய விடுதலைப் போராட்டம் முன்னகர்த்தப்படுகின்றது என்றால் எமது தலைவரின் சிந்தனை தான்.

எதிரியிடம் இருந்து மீட்டெடுக்கப்பட்டு மலரப்போகும் எங்களுடைய தமிழீழம் இந்த உலகப்பந்தில் உயர்ந்து நிற்கும் என்ற உன்னதமான நம்பிக்கையை இன்று ஏற்படுத்தியுள்ளது. அதனுடைய உயர்ச்சியும் தொடர்ச்சியுமாகத் தான் இச் சஞ்சிகையின் வெளியீடு அமைந்துள்ளது எனவும் சு.ப.தமிழ்ச்செல்வன் தனது சிறப்புரையில் தெரிவித்தார். (அ-5)

## இராசிபலன்

03.06.2007
வைகாசி 20 ஞாயிற்றுக்கிழமை.
துதியை முற்பகல் 8.24 வரை
மூலம் மு.ப.10.35 மணிவரை
இராகுகாலம் 04.22–05.52 மணிவரை
சுபநேரம் 8.52–10.22 மணிவரை
அமிர்த சித்தம்

**மேடம்:-** சுரிப் பிரயாசை, எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு,இனசனத் தொடர்பு.

**இடபம்:-** மனக்கவலை, முழங்கால் வலி, பொருள் விரயம், திடீர் நன்மை.

**மிதுனம்:-** கீர்த்தி, போசன சுகம், நல்ல முயற்சி, வாக்குமேன்மை.

**கடகம்:-** தடைப்பட்ட காரியம் கைகூடும், தேக நலன், பெரியோர் உதவி, சத்துரு ஜெயம்.

**சிங்கம்:-** குடும்பக் கவலை; காரிய இடையூறு, பணக்குறைவு, உடல் நலக்குறைவு.

**கன்னி:-** ரோக நிலை , வீண் பயம்,முயற்சி தாமதமாகும், தன விரயம்.

**துலாம்:-** மாதர் நட்பு, நல்ல காரியம், போசன சுகம், உறவினர் சந்திப்பு.

**விருச்சிகம்:-** போசன சுகக்குறைவு, பொருள் விரயம், கௌரவக் குறைவு ,வேலைச் சுமை

**தனுசு:-** வெகுமானம் ,விருந்துபசாரம்,பெரியோர் உதவி, சயனசுகம்.

**மகரம்:-** பிறருக்குஉதவி, திடீர் பயணம், .சோம்பல் நிலை, சுபசெலவு.

**கும்பம்:-** தனதானிய சேர்க்கை,குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை,கீர்த்தி.

**மீனம்:-** உற்சாகமான நிலை, பெரியோர் உதவி, முயற்சி கைகூடும். அதிகாரம்.

-வளவன்

## கலந்துரையாடல்

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த போக்குவரத்துப் பிரச்சினைகளால் கடமைக்கு திரும்பமுடியாமல் உள்ள தற்காலிக இணைப்புப் பெறாத கல்வி சார், கல்வி சாரா ஊழியர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## கடுமையான வலியால் ஞாபக சக்தி குறையும்

கடுமையான வலியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு , அவர்கள் செய்யும் வேலையில் குறைபாடு மற்றும் ஞாபக சக்திக் குறைவு ஏற்படுகிறது என்று சமீபத்தில் அமெரிக்காவில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

ஞாபக மறதி என்பது அநேகமாக அனைவருக்குமே இருக்கும் ஒரு பிரச்சினை தான் பொதுவாக ஒரு வேலை செய்யும் போது மற்றொரு விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள்வது கடினம். உதாரணமாக பேனாவைத் தேடிக் கொண்டிருக்கும் போது போன் நம்பரை மறந்துவிடுவோம்.

கனடாவில் உள்ள அல்பேர்டா பல்கலைக்ககழத்தில் மயக்க மருந்து மற்றும் வலி மருந்து பிரிவில் உதவிப் பேராசிரியராக இருப்பவர் புருஸ்டி டிக் அவருடன் பணியாற்றுபவர் சைபுதின் ரஷீக் இவர்கள் இருவரும் சேர்ந்து அனஸ்தீஷியா மற்றும் அனல்கேஷியா என்ற பத்திரிகையில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளனர்.

அந்தக் கட்டுரையில் கடுமையான வலியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலை செய்வதில் குறைபாடு, ஞாபகசக்தி குறைவு ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் டிக் மற்றும் சைபுதின் ரஷீக் தாங்கள் பணியாற்றும் பல்கலைக்கழகத்திலேயே உள்ள வலி கிளினிக்கில் சிகிச்சை பெற்று வரும் 24 நோயாளிகளை ஆய்வுக்கு உட்படுத்தினர். அவர்கள் அனைவரும் முதுகு வலி, கை கால் வலி, மூட்டு வலி அல்லது உடலின் ஏதாவது ஒரு பாகத்தில் வலி என பலவித வலிகளால் கடந்த ஆறு மாதங்களாக அவதிப்பட்டு வருகின்றனர்.

அந்த நோயாளிகளிடம் செய்யும் வேலையில் கவனம் செலுத்துவது மற்றும் ஞாபக சக்தி குறித்து சோதனை நடத்தப்பட்டது.

அவர்களில் 16 பேர் தங்களுடைய உடல் நிலை காரணமாக தங்கள் வேலை பாதிக்கப்பட்டுள்ளதையும் தங்களுக்கு இருக்கும் ஞாபக சக்தி குறைபாட்டையும் ஒப்புக்கொண்டனர். (அ-5)

## மகோற்சவம்

அருள்மிகு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருக்கோவில் ஆண்டுப் பெருவிழா எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 13 ஆம் திகதி புதன்கிழமை தேர் உற்சவமும் 14ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் 15ஆம்திகதி திருவூஞ்சல் திருத்தண்டிகைத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

திருத்தண்டிகைத் திருவிழாவிலன்று சுவாமி, சீனிவாசகம் வீதி, சிவன்பண்ணைவீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக பவனி வரவுள்ளதாக தேவஸ்தானப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

ஒருவன் நிர்வாணமாக இருக்கும் போது எழுந்து நிற்பதை விட உட்கார்ந்திருப்பது மேலானது.

—அங்கேரி

வலம்புரி

# தென்னிலங்கையில் இருந்து தமிழர்கள் துரத்தப்படும் அவலம்

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காணமுடியாத இலங்கை அரசுகள் இப்போது ஒட்டுமொத்த நாட்டையும் பயங்கரமான சூழலுக்குள் தள்ளி விட்டுள்ளன.

இலங்கையின் எந்தப் பாகத்திலும் பாதுகாப்பு இல்லை என்ற உண்மையை உலகம் இப்போது நன்கு உணர்ந்துள்ளது.

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது. தமிழர்கள் வந்தேறுகுடிகள். அவர்கள் நாம் வழங்கும் உரிமைகளைப் பெற்றுக்கொண்டு வாழவேண்டியதுதான் என ஜாதிக ஹெல உறுமய வெளிப்படையாகக் கூறியுள்ளது.

பெரும்பான்மை இனம் என்ற ஒரே காரணத்திற்காக இலங்கை தமக்கே உரியதெனச் சொந்தம் கொண்டாடும் சிறுமைத் தனத்தை இலங்கை தவிர்ந்த வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது.

தமிழர்களும் இந் நாட்டின் பிரஜைகளே. அவர்களும் சிங்கள மக்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளை அனுபவிக்கும் உரிமை உடையவர்கள் என்ற உணர்திறன் சிங்களத் தலைவர்களிடம் ஏற்படவில்லை.

அன்றைய கால கட்டத்தில்- குறுகிய மனப்பான்மையின் இறுக்கத்திற்குள் இருந்து சிங்களத் தலைவர்களால் மீள முடியவில்லை என்பதால் அவர்கள் இனவாதம் பேசினார்கள்-தமிழர்களை அடிமைப்படுத்தினார்கள் என எடுத்துக்கொள்ளலாம் எனில்;

இன்றைய சிங்களத் தலைவர்களும் இதே தவறை அல்லது அதற்கு ஒரு படி மேலான தவறை இழைக்கும் போது ஒட்டுமொத்த சிங்களத் தலைமைகளும் தமிழர்களுக்கு எதிரான போக்கையே கொண்டுள்ளனர் என்ற முடிபுக்கு வருவதில் எந்தத் தவறும் இல்லை.

இவற்றை உறுதி செய்வதாகப் பல்வேறு நிகழ்வுகள்,சம்பவங்கள் இடம் பெற்றுள்ள போதிலும் ஒரு சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள ஹோட்டல்களில் தங்கியுள்ள தமிழர்களை வெளியேறுமாறு பொலிஸார் விடுத்த அறிவிப்பு;

இந் நாட்டில் தமிழர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை,கௌரவம்,சுதந்திரம் என்பவற்றின் பரிமாணத்தை அளவிடுவதற்கு உகந்த குறிகாட்டியாக அமைந்துள்ளது.

நாட்டின் தலைநகராகவுள்ள கொழும்பிலேயே அனேகமான அலுவல்களை செய்யவேண்டியுள்ளது. கடவுச் சீட்டு ,தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் முதல் பிற திணைக்களங்களின் தலைமைப் பீடங்களில் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் வரை எல்லாவற்றுக்கும் கொழும்பு தலைமையகமாக இருப்பதால் வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் கொழும்புக்குச் செல்ல வேண்டிய தேவையும் அங்கு தங்கியிருக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது.

அதேநேரம் வடக்குக் கிழக்கில் இருந்து கொழும்பிற்குச் செல்லும் அனைவரும் தங்குவதற்கு உறவினர்களின் வீடுகளை எதிர்பார்க்க முடியாது.

அவ்வாறான நிலையில் ஹோட்டல்களில் தங்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இந் நிலையில் ஹோட்டல்களில் தங்கியுள்ள தமிழர்களை உடனடியாக வெளியேறுமாறு பணித்தால் அவர்கள் எங்கு செல்ல முடியும். எப்படித் தமது தேவைகளை நிறைவு செய்ய முடியும்.

யதார்த்தத்தை உணராமல் தமிழர்கள் என்ற நோக்கில் எதுவும் எப்படியும் செய்யலாம் என்றால் மிக விரைவில் தென்பகுதியில் இருந்து தமிழர்களை வெளியேற்றும் அவலமும் இடம் பெறலாம். அவ்வாறு ஏற்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதும் இல்லை.

# மாகாண சபைக்கு மேலான அதிகாரப் பகிர்வு யோசனை

## ஐ.தே.கட்சியின் ஜனநாயகக்குழு முன்வைத்தது

(கொழும்பு)

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு மாகாண சபைக்கு மேலான அதிகாரப் பகிர்வொன்று அவசியமென ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனநாயகக்குழு தெரிவித்துள்ளது. தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாணும் தமது யோசனையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக்குழுவின் தலைவர் கருஜயசூரிய தலைமையில் கொழும்பு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் நேற்று கட்சி மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் மிலிந்த மொறகொட, லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன,ராஜித சேனாரட்ண,பந்துல குணவர்த்தன , காமினி லொக்குகே,பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பி.தயாரட்ண ஆகிய அமைச்சர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டனர்.

'நாட்டுக்காக நாம்' என்ற தொனி பொருளில் இம் மாநாடு அமைந்திருந்தது. நாட்டினைக் கட்டியெழுப்புவது தொடர்பாக பத்து யோசனைத் திட்டங்கள் இதன்போது முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி அதன் ஆரம்பகாலம் முதல் 1994 ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்திய ஜனநாயக செயற்பாடுகளை மீண்டும் வலுப்படுத்தி கட்சியை மறுசீரமைப்பது,முதல் யோசனையாக அமைந்திருந்தது.

இனப்பிரச்சினைக்கு கட்சிகளின் ஈடுபாடுகளுடன் நடைமுறைச்சாத்தியமான அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொள்வதற்கான துரித முறைமை ஒன்றை தயாரிப்பது இரண்டாவது யோசனையாகும்.

விடுதலைப்புலிகளின் பயங்கரவாத மற்றும் யுத்த நடவடிக்கைகளை தோல்வியடையச் செய்வதற்காக அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சியின் பொது எதிரிக்கு எதிராக அரசியல் சக்திகளுடன் இணைந்து செயற்படுவது மூன்றாவது யோசனையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நிரந்தரமாக கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு தற்போது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனநாயகக்குழு தனது யோசனையில் சுட்டிக்காட்டியுள்ளது.

17 ஆவது அரசியல் அமைப்பின் சீர்திருத்தத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவனக்கட்டமைப்பை தாமதமின்றி பூரணப்படுத்துவது அவ் யோசனையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. வறுமையை ஒழித்து நாட்டில் அனைவருக்கும் உயர் வாழ்க்கை மட்டத்தை அடைவதற்கான நாட்டின் பொருளாதாரத்தை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்த வேண்டும் என்ற யோசனையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தேர்தல் மறுசீரமைப்புக்கான யோசனைகளை ஏற்றுக் கொள்ளவும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனநாயகக்குழு இணங்கியுள்ளது. அரசாங்கங்கள் மாறுவதன் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகிய நபர்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட நிவாரணங்களை வழங்குதல் என்பனவற்றை துரிதப்படுத்துவது தொடர்பாகவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதக் குழுவினரால் எதிர்நோக்கப்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் அரசாங்கத்தின் தனித்துவத்தை பாதுகாப்பதனூடாக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (ந-3)

# நாம் யாரிடம் ஆயுதங்களை வாங்கவேண்டும் என்பதை இந்தியா தீர்மானிக்க முடியாது-ஹெல உறுமய

இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. எனவே அது எங்கே ஆயுதங்களை வாங்கவேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை இந்தியாவுக்குக்கிடையாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் உதய ஹம்மன்பில்ல தெரிவித்துள்ளார்.

சீனா ,பாகிஸ்தான் போன்ற நாடுகளிடம் இலங்கை அரசு ஆயுதங்களை கொள்வனவு செய்யக்கூடாது எனவும் இந்தியாவிடமே கொள்வனவு செய்யவேண்டும் எனவும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே ஜாதிக ஹெல உறுமய இவ்வாறு தெரிவித்துள்ளதுடன்,எம்.கே.நாராயணனையும் கடுமையாக சாடியுள்ளது.

இது தொடர்பில் ஹம்மன்பில்ல மேலும் தெரிவித்துள்ளதாவது, இந்தியா போன்ற ஒரு நாடு இப்படியான அறிக்கையை வெளியிட்டு இருக்கும் என்பதை நாம் நம்பவில்லை. அப்படியான அறிக்கை வெளியிடப்பட்டிருந்தால் அது இலங்கையின் இறைமையில் இந்தியாவின் நேரடியான தலையீடாகவே இருக்கும்.

நாம் ஒரு சுதந்திர நாடாக இருப்பதால் எமக்குத் தேவையான ஆயுதங்களை எங்கும் கொள்வனவு செய்யும் உரிமை எமக்கு உண்டு. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவிடம் இருந்து மட்டுமல்லாது பெரும்பாலான நாடுகளினதும் அரச சார்பற்ற நிறுனவங்களினதும் உதவிகள் எமக்குத் தேவை என்றார் அவர். (ந-5)

# அம்பாறை வெடிவிபத்து 3 அதிரடிப்படையினர் பலி

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுப் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற குண்டு வெடிப்பு விபத்தில் மூன்று அதிரடிப்படையி னர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.அக்கரைப்பற்று தம்பட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியள வில் இச் சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்துள்ள படையினரின் சடலங்கள் அம்பாறை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாக அப் பகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# தனியார் வைத்திய சேவையில் ஈடுபடும் சகல வைத்தியர்களுக்கும் அமைச்சின் பதிவு கட்டாயம்

(கொழும்பு)

தனியார் வைத்திய சேவையில் ஈடுபடும் சகல வைத்தியர்களும் தனியார் வைத்தியசாலைகளும் சுகாதார அமைச்சில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலைகளை பதியும் சட்ட மூலத்திற்கு அமைய எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் இந் நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்படாமல் வைத்திய சேவைகளை வழங்கும் தனியார் வைத்தியர்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கமுடியுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய சட்ட மூலத்திற்கு அமைய தனியார் வைத்தியர்களையும், தனியார் வைத்தியசாலைகளையும் பதிவு செய்வதன் மூலம் போலிச்சான்றிதழ்களுடன் வைத்தியத் தொழிலில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே இச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தனியார் வைத்தியர்களிடமும் தனியார் வைத்தியசாலை உரிமையாளர்களிடமும் சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

தனியார் வைத்தியர்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளையும் பதிவு செய்வதற்கான படிவங்கள் சுகாதார அமைச்சினால் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை பூர்த்தி செய்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. (ந-5)

# 8 அம்சங்கள் அடங்கிய திட்டவரைபு ஐ.தே.கட்சி விரைவில் முன்வைக்கும்

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எட்டு அம்சங்கள் அடங்கிய திட்ட வரைபு ஒன்றை பொதுமக்களிடம் முன்வைக்கவுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அதில் மனித உரிமைகளை பாதுகாத்தல், ஜனநாயகத்தைக் காப்பாற்றல்,ஊழல் மற்றும் குற்றச்செயல்களை இல்லாதொழித்தல்,அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கக்கூடிய தீர்வுத் திட்டம்,அரச சேவையில் உள்ள திறமையீனங்களை இல்லாதொழித்தல் என்பன அடங்கலாக எட்டு அம்சங்கள் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஐக்கிய தேசியக்கட்சியின் நிறைவேற்றுக்குழு அங்கீகாரம் அளித்தவுடன் இத் திட்டவரைபு பொதுமக்களுக்கு கருத்தரங்குகள் மூலம் முன்வைக்கப்படும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (ந-5)

# முதியோர் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

முதியோர்களுக்கான தேசிய செயலகம் 'முதியோர்' எனும் சஞ்சிகையை வழமை போல் இவ் வருடமும் வெளியிடவுள்ளது. இதில் முதியோர்களின் சமுதாய,கலாசாரம் சார்ந்த கட்டுரை ,சிறுகதைகள்,கவிதைகள் உள்ளடக்கப்படவுள்ளதால் இதற்குரிய ஆக்கங்களை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலரிடம் ஒப்படைக்குமாறு வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார். (ந)

# விசேட இருக்கை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனையினூடாக சமூக தொழில்வழிச் சிகிச்சைப் பிரிவும் கரித்தாஸ் -கியூடெக் நிறுவனமும் இணைந்து நடாத்தும் விசேட தேவையுள்ள குழந்தைகளுக்கான உதவி வழங்கும் திட்டத்தில் விசேட இருக்கை வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை கரித்தாஸ்-கியூடெக் நிறுவன ஜெபா மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஞானஜோதியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

# தற்காலிக இடங்களில் தங்கியுள்ளவர்கள் தமது அடையாளத்தை சட்ட ரீதியாக உறுதிப்படுத்த வேண்டும்

## தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் அறிக்கை

கொழும்பு நகருக்குள் தற்காலிக இடங்களிலும் சிறிய ஹோட்டல்களிலும் தங்கியுள்ள வடக்குக் கிழக்குப் பிரதேச மக்களைப் பலாத்காரமாக அகற்றுவதற்குப் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கவில்லை.

வடக்குக் கிழக்கு மக்கள் இவ்வாறு கொழும்பு நகருக்குள் தங்கியிருக்கும் போது பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தமது அடையாளத்தை சட்டரீதியாக உறுதிப்படுத்த வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்காலிக இடங்களில் தங்கியிருந்து தமது அடையாளத்தை உறுதி செய்யத் தவறுவார்களாயின் அதற்காகப் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏதேனும் தேவையை அடிப்படையாகக் கொண்டு அந்த மக்கள் கொழும்பு நகருக்கு வருவார்களாயின் தமது தேவை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அவர்கள் மீண்டும் தமது நிரந்தர முகவரி இடங்களுக்குச் செல்ல வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செல்லும்போது அந்த மக்கள் ஏதேனும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் உதவி செய்வர்.

இதனைத் தவிர வடக்குக் கிழக்கு தமிழ் மக்களை நெருக்கடி நிலைக்குத் தள்ளும் நோக்கம் அல்ல எனவும் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)



*கொழும்பில் காணாமல் போனோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து உறவினர்களை மீட்டுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.*

## கோப்பாய் பிரதேச வி. கழகங்களுக்கு

கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கு இடையிலான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகப் பிரதேச செயலர் சி.அன்ரன் மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் 2007 ஆம் ஆண்டு வருடாந்த குழுப் போட்டிக்கான அட்டவணை தயாரிக்கப்படவுள்ளதால் அனைத்துக் கழகத் தலைவர்களையும் செயலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ந-5)

## படையினரின்...

நடத்திய ஒரு மணி நேர தீவிர பதில் தாக்குதல் காரணமாகப் படையினர் தமது முன்னேற்ற முயற்சியினைக் கைவிட்டுப் பழைய நிலைகளுக்குத் திரும்பினர்.

இந்த முன்னேற்ற முயற்சிக்கு ஆதரவு வழங்கும் வகையில் மட்டக்களப்பு குடும்பிமலைப் பகுதி மீது நேற்றுப் படையினர் வான் தாக்குதலை நடத்தியிருந்தனர். (ந-5)

## கடலில்...

ஏ.கே.அந்தோனி தலைமையிலான உயர் குழுவிடம் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே இந்த உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளி நாட்டு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

அத்தோடு ரோந்து நடவடிக்கையின் ஏற்பாடுகள் குறித்து விரைவில் இரு தரப்பும் சந்தித்து முடிபு செய்யவிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

நேற்றைய சந்திப்பின் போது சமீபத்தில் விடுதலைப்புலிகள் நடாத்திய வான்வழித் தாக்குதல் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாகவும் இலங்கையின் வான்பாதுகாப்புத் திறனை வலுப்படுத்த இந்தியா மேலும் உதவிகளை வழங்கும் என இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி உறுதி கூறியதாகவும் இலங்கை வெளிநாட்டு அமைச்சின் அறிக்கை கூறுகின்றது. (ந-3,5)

## வடக்கிலிருந்து...

இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வடக்கிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்படும் பாரவூர்தி ஒன்றில் பெருந்தொகையான சி-4 வெடி பொருள்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர மெண்டிஸ் குறிப்பிட்டார்.

எனினும் சிறுவாகனங்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்துக்களில் எதுவித மாற்றமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கொழும்பில்...

பொன்சேகா தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறினார்கள் எனவும் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை சிலாபம் உடப்புப் பிரதேசத்தில் 7 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சிலாபம் நீதிவான் நேற்று[illegible] உத்தரவிட்டார். (ந-3)

# சலப்பையில் 250 கிராம் கற்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது

## யாழ்.போதனா வைத்தியசாலையில் நடந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளி ஒருவரின் சலப்பையிலிருந்து 250 கிராம் நிறையுடைய கற்கள் சத்திரசிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளன.

இச் சத்திரசிகிச்சை நேற்றுநடைபெற்றது.

சங்கானையைச் சேர்ந்த இ.கண்ணதாசன் என்பவருக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் 200 கிராம் மற்றும் 50 கிராம் நிறையுடைய இரு கற்கள் அகற்றப்பட்டுள்ளன.

இச் சத்திரசிகிச்சையை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி இரவிராஜ் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தனது குப்பைகளை வாங்க...

அதேபோல் தி ஐலண்ட் நாளேடு தெரிவித்துள்ளதாவது, நாம் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள். எனவே சீனா, பாகிஸ்தானிடம் இலங்கை ஆயு தங்களை வாங்கக் கூடாது என்ற எம்.கே. நாராயணனின் கருத்து ஹிட்லரின் நாசி அரசின் தோற்றப்பாட்டைக் கொடுத்துள்ளது.

இந்தியா தாக்குதல் ஆயுதங்களை வழங்காதாம். பாதுகாப்பு ஆயுதங்களை வழங்குமாம் என்ற கருத்து, கற்களையும் துடைப்பம் கட்டைகளையும் கொண்டா விடுதலைப்புலிகளுடன் மோதுவது என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இந்தியாவின் கருத்தை இலங்கை பின்பற்றாது விட்டால் இந்தியா சில குழப்பமான வேலைகளில் ஈடுபடலாம். அதாவது விடுதலைப்புலிகளின் மீதான தனது கட்டுப்பாடுகளை மென்மையாக்கலாம் என அது தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் டெய்லி மிரர் நாளேடு தெரிவித்துள்ளதாவது,

பிராந்திய காவல்துறை வீரர் போன்று செயற்பட இந்தியா முயல்கின்றது. ஒரு சுதந்திர நாடு ஒன்றின் மீதான மன்மோகன் சிங்கின் அணுகுமுறை ஜனநாயகமற்றது. எம்.கே.நாராயணனின் வாதத்தின் அடிப்படையில் செயற்பட நாம் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது.

எம்.கே.நாராயணனின் கருத்துத் தொடர்பாக கேலிச் சித்திரம் ஒன்றை வரைந்த டெய்லி மிரர் நாளேடு, 'இந்தியா தனது குப்பைகளை வாங்க நிர்ப்பந்திக்க முடியும்' என்ற வாசகத்தின் கீழ் ஒரு குப்பை நிரம்பிய கூடையின் முன் நாராயணன் நிற்பது போன்ற படத்தை வரைந்துள்ளது.

இந்தியாவால் முன்னர் வழங்கப்பட்ட இரு பரிமாண ராடர்கள் விடுதலைப்புலிகளின் வானூர்திகளைக் கண்டறியத் தவறிவிட்டதென்ற குற்றச்சாட்டு முன்னர் எழுந்ததும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கடத்தப்பட்ட...

வகுப்புக்களை இரு கிழமைகள் பகிஷ்கரித்திருந்தனர். ஆனாலும் தமது எதிர்காலம் கருதியும் கடத்தப்பட்ட மாணவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கையோடும் மீண்டும் தமது வகுப்புகளுக்குச் சமுகமளித்தனர்.

ஆனாலும் கடத்தப்பட்ட மாண்வர்கள் இதுவரை விடுதலை செய்யப்படாமையானது மாணவர் மனங்களில் பல்வேறு நம்பிக்கையீனங்களையும் தோற்றுவித்து வருகின்றது.

எனவே இது விடயத்தில் கடத்தப்பட்ட மாணவர்களை விடுவிக்க யாழ்.அரச அதிபர், யாழ்.மாவட்ட படைத் தளபதி மற்றும் கல்விமான்கள், சமூகத் தலைவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் வலியுறுத்துகின்றோம். இவ்வாறு சர்வதேச மாணவர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (ந)

## பொங்கல் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புலோலி மந்திகை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (ந-35)

## நந்தன...

ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டதுடன் 2004 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ஆயுதங்கள்...

இந்தத் தகவலை இலண்டனிலிருந்து வெளிவரும் யேன்ஸ்(IANS) சஞ்சிகை வெளியிட்டுள்ளது. இராணுவத்திற்கும் கடற்படையினருக்குமான யுத்தத் தளபாடங்களையும் சிறிய ஆயுதங்களையும் விற்பனை செய்யும் முகமாக சீன பல் தொழில் நுட்ப நிறுவனம் ஒன்று 37.6 மில்லியன் டொலர்களுக்கான வியாபார ஒப்பந்தம் ஒன்றை கடந்த ஏப்ரல் மாதத்தில் செய்துள்ளது.

இந்தத் தகவலை இலங்கை அமைச்சரவையின் ஆவணம் ஒன்று வெளிப்படுத்துவதாகத் தெரிவிக்கும் மேற்படி சஞ்சிகை , கொழும்பில் 1984 இல் நிறுவப்பட்ட சீன பல் தொழில்நுட்ப நிறுவனத்திற்குப் பதிலாக சீன வடக்குத் தொழில் கூட்டுஸ்தாபனத்துடன் (NORINCO) பாதுகாப்பு உபகரணங்களைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தை இலங்கை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இராணுவ ஆய்வாளர்களின் கருத்துப்படி பல்தொழில் நுட்ப நிறுவனம் மக்கள் விடுதலை இராணுவத்தின் தலைமை நிலையமாகக் கருதப்படுவதுடன் சிறிய, மத்திய தர ஏவுகணைகளை விற்பனைசெய்வதற்கான அனுமதியையும் பெற்றுள்ளநிறுவனம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5,6)


**விற்பனைக்கு**

நெல்லியடியில் இயங்கி வரும் தனியார் வாணிபம் (அழகு சாதனம், அலங்கார, வீட்டு உபகரணப் பொருட்கள்) முற்று முழுதாக விற்றுத்தீர்த்தல். மொத்தமாக பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். அத்துடன் கடைக்குரிய அலுமினிய சோட்கேஸ்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு; 0777149459

(C-127)

**உங்கள் குழந்தைகளுக்கு HNB'ன் அன்பளிப்புகள்**



பின்வரும் பாடசாலைகளில் நடைபெறும் புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சியில் பங்குபற்றும் ஹற்றன் நஷனல் வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கில் ரூபா 500- 5000 வரை வைப்பிலிட்டு பென்சில்பை, தொப்பி, பாடசாலைப்பை போன்ற கவர்ச்சிகரமான வெகு மதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

(இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே)

| திகதி | பாடசாலை |
|---|---|
| 04.06.2007 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 05.06.2007 | யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி |
| 06.06.2007 | யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் |
| 07.06.2007 | யா/அச்சுவேலி மத்திய கல்லூரி |
| 08.06.2007 | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |

(C-128)

யாழ்ப்பாணம்,சுன்னாகம்,நெல்லியடி,ஸ்ரான்லி வீதி,மானிப்பாய்

**தேவை**

எமது நிறுவனத்திற்கு தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு:-

றொசானி காமன்ஸ்
263/1 இராஜகாரிய லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

றொசானி காமன்ஸ்
சபாபதிப்பிள்ளை வீதி,
c/o வசந்தி,
புற்றுநோய் காப்பகம்
அருகாமை
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(C-130)

**தேவை**

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவைப் படுகின்றனர்.

❖ விற்பனைப் பிரதிநிதிகள்
(18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்)
❖ கணக்காளர்
(45 வயதுக்கு மேல்)

தகுதியானவர்கள் நேரில் வரவும்.

தொலைபேசி:- 222 7543

புதிய கஸ்தூரி,
யாழ்வீதி,
மானிப்பாய்.

(C-126)


இப் பத்[illegible] வலம்புரி [illegible] கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.